## தமிழகத்தில் சிறு வணிகர்கள், நிறுவனங்களுக்கான 'சமாதான்' திட்டம் தொடங்கியது




'சமாதான்' திட்டத்தின்கீழ் 5 பேருக்கு வரி நிலுவை ரத்துக்கான சான்றிதழ்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, வணிகவரி ஆணையர் தீரஜ் குமார், வணிகவரி, பதிவுத் துறை செயலர் ஜோதி நிர்மலாசாமி, வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா ஆகியோர்.

**சென்னை:** வணிகர்கள், நிறுவனங்களுக்கான வணிகவரி நிலுவை மேல்முறையீடு பிரச்சினைகளுக்கு முடிவுகாணும் வகையில் தமிழக அரசு அறிவித்த புதிய'சமாதான்' திட்டம் நேற்று முதல் அமலுக்கு வந்தது. சிறு வணிகர்களுக்கு வரி நிலுவை ரத்து சான்றிதழ்களை வழங்கி முதல்வர் ஸ்டாலின் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.

வணிகர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் வணிக வரித் துறை இடையே உருவாகும் வணிக வரி நிலுவை, மேல்முறையீடு ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், தமிழக அரசால் 'சமாதான்' திட்டம் அவ்வப்போது அறிமுகம் செய்யப்பட்டு, குறிப்பிட்ட காலத்துக்கு அமல்படுத்தப்படுகிறது. கடந்த 2017-ம் ஆண்டு ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்ட நிலையில், தமிழகத்தில் வரி நிலுவை தொடர்பாக சமாதான் திட்டம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் கடந்த 10-ம் தேதி110 விதியின் கீழ் ஓர் அறிவிப்பு வெளியிட்டார். அப்போது பேசிய முதல்வர், ‘‘தமிழக அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவை தொகைதொடர்பாக 2.12 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில் சம்பந்தப்பட்ட வணிகர்கள், நிறுவனங்களின் எண்ணிக்கை 1.43 லட்சம். நிலுவையாக உள்ள தொகை ரூ.25 ஆயிரம் கோடி. எனவே, பழைய நிலுவை தொகையை வசூலிப்பதில் சமாதான் திட்டத்தை செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. புதிய அணுகுமுறை, கூடுதல் சலுகைகளுடன் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது’’ என்று தெரிவித்தார்.

தமிழக வரலாற்றில் சிறு வணிகர்களுக்கு வரி நிலுவை தள்ளுபடி முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வரி மதிப்பீட்டு ஆண்டில்ரூ.50 ஆயிரத்துக்கு குறைவான வரி, வட்டி, அபராத தொகை செலுத்த வேண்டிய வணிகர்களுக்கு நிலுவை தொகை முற்றிலும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இவர்கள் தவிர, இதர வணிகர்கள், நிறுவனங்கள் ரூ.50 ஆயிரம் முதல் ரூ.10 லட்சம் வரை, ரூ.10 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை, ரூ.1 கோடி முதல் ரூ.10 கோடி வரை, ரூ.10 கோடிக்கு மேல் நிலுவை என 4 வரம்புகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

நிலுவை தொகையை வணிகர்கள் கட்டுவதற்கு முன்வரும் நாள் வரை அவர்கள் கணக்கில் ஏற்றப்படக்கூடிய திரண்ட வட்டித் தொகையும் (Accrued Interest) முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும் என்றும் முதல்வர் அறிவித்தார்.

அதன்படி, சிறு வணிகர்களுக்கான சமாதான் திட்டம் நேற்று முதல் அமலுக்குவந்தது. சென்னை தலைமைச் செயலகத்தில் நடந்த நிகழ்வில், முதல்வர் ஸ்டாலின், சிறு வணிகர்களுக்கு வரி நிலுவை ரத்துக்கான சான்றிதழ்களை வழங்கி இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்.

வணிகவரி, பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, வணிகவரி ஆணையர் தீரஜ்குமார், வணிகவரித் துறை செயலர் ஜோதி

நிர்மலாசாமி ஆகியோர் உடன் இருந்தனர். முன்னதாக, சமாதான்திட்டத்தை அறிவித்ததற்காக வணிகர்சங்க பேரமைப்பு சார்பில் அதன் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா, பொருளாளர் சதக்கத்துல்லா, கூடுதல் செயலாளர் வி.பி.மணி உள்ளிட்டோர் முதல்வரை சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இத்திட்டம் 4 மாதங்களுக்கு, அதாவது, 2024 பிப்.15 வரை நடைமுறையில் இருக்கும் இதில், நிலுவை தொகை தள்ளுபடியால் 1.40 லட்சம் வழக்குகளில் சம்பந்தப்பட்ட 95,502 வணிகர்கள் பயனடைகின்றனர்.வரி நிலுவைக்காக பிணைக்கப்பட்டுள்ள 1,002 சொத்துகள் வணிகர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**பெண்ணின் 26 வார கருவை கலைக்க அனுமதி வழங்க உச்ச நீதிமன்றம் மறுப்பு**



கோப்புப்படம்

**புதுடெல்லி:** திருமணமான ஒரு பெண் (27) தன்னுடைய 26 வார கருவைக் கலைக்க உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அதில், “எனக்கு ஏற்கெனவே 2 குழந்தைகள் உள்ளன. 3-வதாக கருத்தரித்திருக்கிறேன். இதனால் மன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும்

இந்தக் குழந்தையை பெற்றெடுக்க முடியாத நிலையில் உள்ளேன். எனவே கருவை கலைக்க அனுமதிக்க வேண்டும்" என கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஹிமா கோலி மற்றும் பி.வி.நாகரத்னா ஆகியோர், கருவை கலைக்க அனுமதி வழங்கி கடந்த 9-ம் தேதி உத்தரவிட்டது. இதை எதிர்த்து மத்திய அரசு மேல்முறையீடு செய்தது. அதில், "பெண்ணின் கருவை கலைக்கக் கூடாது என எய்ம்ஸ் மருத்துவர்கள் குழு அறிவுறுத்தி உள்ளது" என கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஹிமா கோலி மற்றும் பி.வி.நாகரத்னா ஆகியோர் அடங்கிய அமர்வு மாறுபட்ட தீர்ப்பை வழங்கியது.

குறிப்பாக, இந்த அறிக்கையை முன்கூட்டியே தாக்கல் செய்திருந்தால், கருவைக் கலைக்க அனுமதித்திருக்க மாட்டேன் என ஹிமா கோலி தெரிவித்தார். ஆனால், பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கூறிய நீதிபதி நாகரத்னா, மத்திய அரசின் மனுவை நிராகரித்தார்.

இதையடுத்து, தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு இந்த மனுவை விசாரித்து நேற்று தீர்ப்பளித்தது. அந்த தீர்ப்பில் கூறியிருப்பதாவது:பெண்ணின் கரு 26 வாரங்கள் 5 நாட்கள் ஆகிவிட்டது. இந்த சூழ்நிலையில், கருவைக் கலைக்க உத்தரவிட்டால் அது கருக்கலைப்பு சட்டத்தின் 3, 5-வது பிரிவை மீறுவதாக ஆகிவிடும். அதேநேரம் தாயின் உடல்நலனுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று மருத்துவ அறிக்கை கூறுகிறது. எனவே, அந்தக் குழந்தையின் இதயத் துடிப்பை நிறுத்த உத்தரவிட முடியாது.குழந்தை வேண்டாம் என்றால் 26 வாரங்கள் கழித்து நீதிமன்றத்தை அணுகியது ஏன்? குழந்தை பிறக்கட்டும். தாய் விரும்பவில்லை என்றால் குழந்தையை அரசு பராமரிக்கட்டும். இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

திருமணமான பெண்கள், பாலியல் வன்கொடுமையால் கர்ப்பமானவர்கள் கருக்கலைப்பு சட்டத்தின்படி 24 வாரங்களுக்கு உட்பட்ட கருவைக் கலைக்கலாம்.

அதற்கு மேலான கருவை கலைக்க நீதிமன்ற அனுமதி தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

## அக். 21-ல் ககன்யான் திட்டத்தின் முதல்கட்ட சோதனை: இஸ்ரோ தலைவர் சோம்நாத் தகவல்




கோப்புப்படம்

**புதுடெல்லி:** ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் மட்டுமே விண்வெளிக்கு மனிதனை அனுப்பியுள்ளன. இந்த சாதனையை எட்ட இந்தியா தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. கடந்த 2014-ல் இத்திட்டத்துக்கு ‘ககன்யான்’ என பெயரிடப்பட்டு ஆராய்ச்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன. பூமியில் இருந்து 400 கி.மீ. தூர சுற்றுவட்டப் பாதைக்கு விண்கலம் மூலம் 2-3 விண்வெளி வீரர்களை அனுப்பி, 1 முதல் 3 நாள் ஆய்வுக்கு பிறகு பூமிக்கு திரும்ப அழைத்து வருவதுதான் ககன்யான் திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இந்த திட்டத்துக்கான முதல்கட்ட சோதனை விரைவில் தொடங்கவுள்ளதாக இஸ்ரோ கடந்த 7-ம் தேதி அறிவித்தது. வாகனத்தை விண்வெளிக்கு அனுப்பி, அதை மீண்டும் பூமிக்கு கொண்டு வந்து, வங்காள விரிகுடாவில் இறங்கியதும்

அதை அங்கிருந்து மீட்பது ஆகியவற்றை உள்ளடக்கியது இத்திட்டம். இதற்கான ஒத்திகை பணிகளை இந்திய கடற்படை ஏற்கெனவே தொடங்கிவிட்டது. இந்நிலையில் இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத் டெல்லியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் ககன்யான் திட்டம் தவிர பல்வேறு திட்டங்களில் இஸ்ரோ ஈடுபட்டுள்ளது. பூமியின் காலநிலை மற்றும் வானிலையை ஆய்வு செய்யும் திட்டங்களை இஸ்ரோ தொடங்க உள்ளது. தவிர, தகவல் தொடர்பு, ரிமோட் சென்சிங் செயற்கை கோள்கள் உள்ளிட்ட வழக்கமான அறிவியல் பணிகளிலும் இஸ்ரோ ஈடுபட்டுள்ளது.

ககன்யான் திட்டத்தின் முதல்கட்ட சோதனை (டிவி-டி1) அக்.21-ம்தேதி மேற்கொள்ளப்படும். ஹரிகோட்டாவில் இருந்து காலை 7 மணிமுதல் 9 மணிக்குள் விண்வெளி வாகனம் விண்ணில் ஏவப்படும்.

செவ்வாய், வெள்ளி, சந்திரனுக்கான ஆய்வுத் திட்டங்களும் எங்களிடம் உள்ளன. சூரியனை ஆய்வு செய்யும் இந்தியாவின் முதல் திட்டமான ஆதித்யா எல்-1 திட்டத்தை பொறுத்தவரை அந்த விண்கலம் லாக்ராஞ்சியன் எல்-1 புள்ளியை நோக்கி பயணிக்கிறது.

அந்த விண்கலம் ஆரோக்கியமாக உள்ளது. தனது 110 நாள் பயணத்தின் நடுப்பகுதியில் உள்ளது. அது எல்-1 புள்ளியை நோக்கி சரியான திசையில் செல்கிறது. ஜனவரி மத்தியில் எல்-1 புள்ளியை அது சென்றடையும். பிறகு எல்-1 புள்ளியில் உள்ள ஹாலோ சுற்றுவட்டப் பாதையில் அதை செலுத்துவதற்கான பணியில் நாங்கள் ஈடுபடுவோம். இதன் பிறகு கருவிகள் இயக்கப்பட்டவுடன் அறிவியல் தரவுகளை அளிக்கத் தொடங்கும். இவ்வாறு சோம்நாத் கூறினார்.


**மகிழ்ச்சியாக தூங்கும் லேண்டர்:** நிலவுக்கு மூன்றாவது முறையாக சந்திரயான்-3 என்ற விண்கலத்தை இஸ்ரோ அனுப்பியது. இந்த விண்கலத்தில்

இருந்து பிரிந்த விக்ரம் லேண்டர், கடந்த ஆகஸ்ட் 23-ம் தேதி நிலவில் தரையிறங்கி வரலாற்று சாதனை படைத்தது.

விக்ரம் லேண்டர் தரையிறங்கிய பிறகு அதிலிருந்து பிரக்யான் ரோவர் கருவி வெளியே வந்து, நிலவின் மேற்பரப்பில் நகர்ந்து சென்று ஆய்வு மேற்கொண்டது. நிலவில் செப்டம்பர் 4-ம் தேதி பகல் பொழுது முடிவடைந்ததால், லேண்டர் மற்றும் ரோவரை ஸ்லீப் மோடுக்கு இஸ்ரோ மாற்றியது.

இதுகுறித்து சோம்நாத் கூறும்போது, "நிலவில் லேண்டர் மகிழ்ச்சியுடன் உறங்கிக் கொண்டுள்ளது. நிலவின் பகல் பொழுதில் திட்டமிடப்பட்டிருந்த பணிகளை அது வெற்றிகரமாக செய்து முடித்துள்ளது. அது விரும்பினால் விழித்து எழட்டும். அதுவரை காத்திருப்போம்" என்றார்.

## கிரிக்கெட் உட்பட 5 விளையாட்டுகள் 2028-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் சேர்ப்பு



கோப்புப்படம்

**மும்பை:** கிரிக்கெட் உட்பட 5 விளையாட்டுகள் 2028-ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் 141-வது அமர்வு மும்பையில் கடந்த 15-ம் தேதி தொடங்கியது. 3 நாட்கள் நடைபெறும் இந்த அமர்வில் நேற்று, 2028-ம் ஆண்டு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் 5 புதிய விளையாட்டுகளை சேர்ப்பதற்கு முறைப்படி அனுமதி வழங்கப்பட்டது.

இதுதொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தனது எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “லாஸ் ஏஞ்சல்ஸ் 2028 ஒலிம்பிக் போட்டிகளின் ஏற்பாட்டுக் குழு பரிந்துரைத்துள்ள ஐந்து புதிய விளையாட்டுகள் ஐஓசி அமர்வால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி பேஸ்பால்/சாஃப்ட் பால், கிரிக்கெட் (டி 20), ஃபிளாக் கால்பந்து, லாக்ரோஸ், ஸ்குவாஷ் ஆகிய விளையாட்டுகள் 2028-ம் ஆண்டு லாஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் இடம் பெறும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் உள்ளிட்ட 5 விளையாட்டுகளை லாஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் மொத்தம் 99 சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினர்களில் இருவர் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்தனர். ஒலிம்பிக்கில் 123 வருடங்களுக்குப் பிறகு தற்போதுதான் கிரிக்கெட் இடம் பெறுகிறது. கடைசியாக 1900-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம் பெற்றிருந்தது. இதில் இங்கிலாந்து அணி பிரான்ஸை வீழ்த்தியிருந்தது

EVA STALIN IAS ACADEMY